*23 ஆண்டுகள் 218 தமிழாசிரியர்களுக்குச் சிறப்பு*

# நல்லாசிரியர்களைச் சிறப்பிக்கும் உன்னத விருது




2012ஆம் ஆண்டில் நல்லாசிரியர் விருது வழங்கும் விழாவில் மற்றொரு விருது அங்கமாக சேர்க்கப்பட்ட வாழ்நாள் சாதனையாளர் விருதை மூத்த தமிழாசிரியர்களான முனைவர் சுப. திண்ணப்பன் (இடமிருந்து 2வது), அமரர்கள் ப. கேசவன் (வலக்கோடி), மு. தங்கராசன் (இடக்கோடி) ஆகியோர் பெற்றனர். வலமிருந்து இரண்டாவதாக இருப்பவர் தமிழ் முரசின் முன்னாள் தலைவர் எஸ். சந்திரதாஸ். **படம்: தமிழ் முரசு**




2014ஆம் ஆண்டு நல்லாசிரியர் விருது பெற்றவர்களுடன் அப்போதைய கல்வி மற்றும் தொடர்பு, தகவல் துணை அமைச்சர் சிம் ஆன். **படம்: த.கவி**

**வீ. பழனிச்சாமி**
இணை ஆசிரியர்

எந்த ஒரு சமுதாயத்திற்கும் பெற்றோர், ஆசிரியர், மாணவர் ஆகிய மூவரும் இன்றியமையாதவர்கள். ஒரு சமுதாயத்தை உருவாக்கும் பொறுப்பு, இந்த மூவரையும் சேர்ந்தது.

மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற கூற்றுக்கு இணங்க, ஒரு குழந்தையின் கற்றல் பயணம் தொடங்குவது வீட்டிலிருந்துதான், முக்கியமாக பெற்றோரிடமிருந்து.

முதலில் பெற்றோரின் கண்களின் வழியே உலகத்தைப் பார்ப்பவர்கள், பிறகு ஆசிரியர் எனுமொரு வழிகாட்டியின் உதவியுடன் உலகத்தைக் காணத் தொடங்குகிறார்கள்.

அத்தகைய குருவுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் அவர்களைக் கௌரவப்படுத்தி, மாணவர்களுக்கு அவர்கள் எந்தெந்த வழிகளில் உற்சாகமூட்டி அவர்களை நாளைய தலைவர்களாக உருவாக்கப் பாடுபட்டார்கள் என்பதை மக்களுக்குத் தெரிவிக்கும் நோக்கத்தில் ஏற்படுத்தப்பட்டதுதான் நல்லாசிரியர் விருது.

வகுப்பறையில் தங்கள் கற்பிக்கும் திறனை முழுமையாக வெளிப்படுத்தி, மாணவர்களின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டு வரும் தமிழ் ஆசிரியர்களின் பங்களிப்பை வெளியுலகுக்குக் கொண்டு வந்து அவர்களை நாடறியச் செய்ய வேண்டும் எனும் நோக்கத்தில் நல்லாசிரியர் விருது வழங்கும் விழா 2002ஆம் ஆண்டில் தோற்றம் கண்டது.

முதலாவது விழாவுக்கு அப்போதைய கல்வி அமைச்சராக இருந்த தற்போதைய அதிபர் திரு தர்மன் சண்முகரத்னம் சிறப்பு விருந்தினராக வருகை தந்து நல்லாசிரியர்களுக்கு விருது வழங்கினார்.

**தமிழாசிரியப் பெருமக்கள் ஆற்றும் பங்கு அளப்பரியது. பிள்ளைப் பருவம் முதல் தமிழ் அறிவையும் உணர்வையும் ஊட்டி வளர்க்கும் தமிழாசிரியர்களின் பங்கைப் போற்றிக் கொண்டாட தமிழ் முரசும் சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கமும் கைகோத்து 23 ஆண்டுகளுக்கு முன் நல்லாசிரியர் விருதைத் தொடங்கின.**

ஆண்டுதோறும் தமிழ் ஆசிரியர்களுக்கு மட்டுமல்லாமல், அவர்கள் பணியாற்றும் பள்ளிகளின் முதல்வர்களையும் அழைத்து பள்ளிக்கு விருதளிப்பது பேரூக்கம் அளிப்பதாகத் திகழ்கிறது.

தமிழ் முரசு, சிங்கப்பூர் தமிழாசிரியர் சங்கம் ஆகிய இரு அமைப்புகளுடன் மூன்றாவது பங்காளியாக சிங்கப்பூர்க் கல்வி அமைச்சும் பின்னர் இணைந்து கொண்டது. பின்னர் 2017ஆம் ஆண்டிலிருந்து கல்வி அமைச்சுக்குப் பதிலாக தமிழ்மொழி கற்றல் வளர்ச்சிக் குழு ஏற்பாட்டுக் குழுவில் இடம்பெற்று வருகிறது.

கல்வி அமைச்சின் பள்ளிகளில் பணியாற்றும் தமிழ் ஆசிரியர்கள் மட்டுமல்லாமல், பல்லாண்டுகளாக தமிழ் கற்பித்தல் பணியில் முத்திரை பதித்து, அடுத்த தலைமுறை இளம் ஆசிரியர்களையும் மாணவர்களையும் வார்த்தெடுத்த பதவி ஓய்வு பெற்ற மூத்த தமிழாசிரியர்களையும் கௌரவிக்கும் நோக்கத்தில் உருவாக்கப்பட்டதுதான் வாழ்நாள் சாதனையாளர் விருது.

2012ஆம் ஆண்டில் நல்லாசிரியர் விருது வழங்கும் விழாவில் மற்றொரு விருது அங்கமாக சேர்க்கப்பட்ட வாழ்நாள் சாதனையாளர் விருதை மூத்த தமிழாசிரியர்களான முனைவர் சுப. திண்ணப்பன், அமரர்கள் ப. கேசவன், மு. தங்கராசன் ஆகியோர் பெற்றனர். இந்த விருதுக்கு மூத்த தமிழாசிரியர்களை முன்மொழியும் பொறுப்பை சிங்கப்பூர் தமிழாசிரியர் சங்கம் ஏற்றுக்கொண்டது.

ஈராண்டுகள் கழித்து 2014ஆம் ஆண்டில், தேசிய கல்விக் கழகத்தில் தமிழாசிரியர் பயிற்சி பெறும் சிறந்த ஆசிரியர்களைச் சிறப்பிப்பதற்காக மற்றொரு விருதான சிறந்த பயிற்சி ஆசிரியர் விருதும் அறிமுகப்படுத்தப்பட்டது.

2002 முதல் 2024 வரை நல்லாசிரியர் விருதை மொத்தம் 169 தமிழாசிரியர்களும், வாழ்நாள் சாதனையாளர் விருதை 30 மூத்த தமிழாசிரியர்களும், தேசிய கல்விக் கழக சிறந்த பயிற்சி ஆசிரியர் விருதை 14 பேரும் வென்றுள்ளனர்.

ஆண்டுக்கு ஆண்டு தங்கள் தமிழாசிரியர்களை நல்லாசிரியர் விருதுக்கு முன்மொழிவோர் எண்ணிக்கையும் அதிகரித்து வந்துள்ளது. முன்மொழியப்படும் ஆசிரியர்களிலிருந்து தலைசிறந்தவர்களைத் தேர்வு செய்ய, ஏற்பாட்டுக் குழு கடுமையான தெரிவுமுறைகளை அறிமுகப்படுத்தி, செயல்படுத்தி வருகிறது.

மாணவர்களை அறிவுச் செல்வங்களாக, நாட்டின் எதிர்கால வளங்களாக உருவாக்கும் சிற்பிகளாக விளங்குவோரில் நமது தமிழாசிரியர்களும் மிக முக்கியப் பங்கு வகிக்கின்றனர்.

vpalani@sph.com.sg